நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## DVC. No. 2/2017

## R.W.1 –ன் வாக்குமூலம்

**( எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரங்கசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | அழகேசன் |
| கிராமம் | : | வீரநாயக்கன்பட்டி |
| வட்டம் | : | அரூர் |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **RW1** |
| வயது | : | – |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 27–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இருதரப்பினரும் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.50 PM

1. குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் என்மீதும் எனது பெற்றோர் மீதும், எனது தங்கை, அவருடைய கணவர் ஆகியோர் மீது எனது மனைவி மனுதாக்கல் செய்திருந்தார். நான் உயர்நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி என்னை தவிர மற்ற எதிர்மனுதாரர்களை தனியாக நீக்க நான் எந்த உத்தரவும் பெறவில்லை.

2. இந்நீதிமன்றத்திலும் அவ்வாறு நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. 29.05.2015 ம் தேதி எனக்கு திருமணம் நடைபெற்றது. 2 ம் புகார்தாரர் எனது மகன் என்றால் சரிதான். இருவீட்டார் சம்மதத்துடன் எனது ஊரிலுள்ள சாந்தா திருமண மண்டபத்தில்தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். ஆனால் எங்கள் ஊரில் அந்த மண்டபம் இல்லை மேச்சேரியில் உள்ள சாந்தா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

3. திருமணத்தின் செலவுகளை இருவீட்டாரும் சரிசமமாக பகிர்ந்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. திருமண செலவுகளை நான்தான் செய்தேன். திருமண மண்டபத்தை நான்தான் உறுதிசெய்தேன். திருமணத்தின் போது 2 பவுன் செயின், 2 பவுன் பிரேஸ்லெட், ஹோண்டாயுனிக்கான் இருச்சக்கர வாகனம் புகார்தாரர் வீட்டார் எனக்கு சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றால் 2 பவுன் செயின் எனக்கு போடவில்லை. 2 பவுன் பிரேஷ்லெட் மற்றும் ஹோண்டாயுனிக்கான் வாகனத்தை கொடுத்தார்கள், மீண்டும் திரும்ப வாங்கிக்கொண்டார்கள்.

4. இரண்டு முதல் ஐந்து வரையிலான எதிர்மனுதாரர்கள் நான் காற்றாலையில் வேலை செய்வதால் 2 பவுன் நகையும், ே ஹாண்டாயுனிக்கான் வாகனமும் வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வரதட்சனையாக வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

5. எனது மனைவிக்கு திருமணத்தின்போது அவரது பெற்றோர் எவ்வளவு பவுன் நகை சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் 2வது பக்கத்தில் 3 வது பத்தியில் 10 பவுன் தங்க நகை எனக்கு சீர்வரிசையாக கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

6. பிரமாண பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது மாற்றி 10 பவுன் நகை போடவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 10 பவுன் நகை தொந்தரவு செய்து கட்டாயப்படுத்தி வாங்கியிருக்கிறேன் என்று நானே பிரமாணபத்திரத்தில்

குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதுப்போல்தான் அதன் பின்னிட்டும் மீண்டும் தங்க நகை வாங்கி வரச்சொல்லி பிரச்சனை செய்தேன் என்றாலும் சரியல்ல.

7. மேற்படி 10 பவுன் நகையை சீர்வரிசையாக வாங்கிக்கொண்டு அதே பத்தியில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பதால் நான் வரதட்சனை எதுவும் கேட்கவில்லை என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. திருமணத்தின்போது என் மனைவி DCE படித்துவந்தார் என்றாலும் படிப்பு முடியும் வரை மேட்டூரில் உள்ள அவரது பெற்றோர் வீட்டிலேயே தங்கி படித்து வரட்டும் என்று நான் சொன்னேன் என்றாலும் சரிதான். நான் மேற்படி எனது மனைவி படித்து வந்ததற்கு செலவுகளை நான்தான் செய்தேன் என்று பொய்யாக பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் மனுதாரரின் பெற்றோர்கள்தான் மேற்படி செலவுகளை செய்தார்கள் என்றாலும் சரியல்ல.

9. திருமணத்தின்போது 4 மாதம்தான் படிப்பு மீதம் இருந்தது என்றால் சரிதான். 4 மாதம்தான் இருந்த நிலையில் நான்தான் அதற்கான செலவுகளை செய்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. திருமணத்தின்போது எனது மாத வருமானம் ரூ.15,000/– ஆகும். மேற்படி கல்வி செலவுகளை நான்தான் செய்தேன் என்பதற்கு ரசீதுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது மனைவி பெற்றோர் இருந்த சமயத்தில் வாரம் ஒருமுறை அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை வந்துதான் எனது மனைவியை பார்த்துவிட்டு சென்றேன் என்றால் சரிதான்.

11. படிப்பு முடிந்தபிறகு கோயம்புத்தூரில் தனிக்குடித்தனம் செல்ல தேவையான செலவுகளை மனுதாரரின் பெற்றோர்கள் தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறென்றாலும் மனுதாரரின் தகப்பனார் கோவையில் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கான முன்பணம், முதல் மாதம் வாடகை, முதல் மாதத்திற்கான மளிகைப்பொருட்கள் ஆகியவற்றை வாங்கிக்கொடுத்து தனிக்குடித்தனம் வைத்தார்கள் என்றால் சரியல்ல.

12. நான் திருமணத்திற்காக வரதட்சனை பெற்றுள்ள நிலையில் வழக்கமாக தனிக்குடித்தனம் வைக்கும்போது பெண்ணின் பெற்றோர் தான் அதற்கான செலவுகளை செய்துக்கொடுப்பார்கள் என்ற வழக்கத்திற்கு மாறாக மேற்படி செலவுகளை மனுதாரரின் பெற்றோர் செய்யவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. சரியாக என்னை கவனித்துக்கொள்ளமாட்டார். சமைத்து கொடுக்க மாட்டார். அதனால் தான் எனக்கு செய்யவேண்டிய பணிவடைகளை செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன். காலை 08.30 மணிக்கு வழக்கமாக நான் வேலைக்கு செல்வேன். மாலை 06.00 மணியிலிருந்து 07.00 மணிக்குள் திரும்ப வருவேன்.

14. நான் கோவையில் குடியிருந்த வீட்டிற்கும் வேலை செய்யும் இடத்திற்கும் 20 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நான் மேற்படி பகல் நேரம் முழுவதும் வேலைக்கு சென்றுவந்த நிலையில் 3 வேளை உணவையும் நான் கடையில் வாங்கிக்கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் அவ்வாறு வாங்கிக்கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. காலையில் சாப்பாடு வாங்கிக்கொடுத்துவிட்டு செல்வேன். மதியம் சமைத்துக்கொள்வார் அல்லது பக்கத்தில் இருக்கும் கடையில் வாங்கிக்கொள்வார்.

15. மாதம் ரூ. 15,000/- வருமானத்தில் 3 வேளையும் கடையில் நாங்கள் இருவரும் வாங்கி சாப்பிட்டுக்கொண்டு குடியிருந்தோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு குறைந்த வருமானத்தில் 3 வேளையும் கடையில் சாப்பிட முடியாது என்றாலும் சரிதான். இடையில் சிலநாட்கள் சமைப்பார்.

16. கோவையில் குடியிருந்த எங்களது வீட்டு வாடகை மாதம் ரூ.4000/- என்றால் சரிதான். மனுதாரர் மேட்டுரிலுள்ள தனது பெற்றோர் வீட்டிற்குதான் வருவேன். அரூரில் உள்ள எனது வீட்டிற்கு வரமாட்டேன் என்று சொன்னார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17. மனுதாரர் திருமணமாகி 4 மாதங்கள் தினமும் கல்லூரிக்கு சென்று வந்த நிலையில் அரூர் வந்து எனது பெற்றோர்களை பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் மனுதாரரை வாரம் ஒருமுறை எனது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்றேன் என்றாலும் 3 ம் மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் விவசாய வேலை செய்ய சொல்லியும் ஆடுமாடுகளை பராமரிக்க சொல்லியும், பால் கறக்க சொல்லியும் கட்டாயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு சொன்னதற்கு மனுதாரர் தான் நகர்புறத்தில் வளர்ந்ததால் தன்னால் அந்த வேலை செய்ய முடியாது என்று சொன்னதற்கு 3 ம் மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் இந்த வேலைக்கூட செய்யசொல்லி உனது வீட்டில் சொல்லிதரவில்லையா என்று திட்டியும் உன்னுடைய அம்மா என்ன வளர்ப்பு வளர்த்தார் என்று சொல்லி மனுதாரரை திட்டினார்கள் என்றால் சரியல்ல.

18. எனக்கு மாத வருமானம் ரூ15,000/- மட்டுமே வந்த சூழ்நிலையில் வீட்டு வாடகை ரூ.4000/- கொடுத்துவிட்டு, தினமும் கடையில் வாங்கி சாப்பிட்டுக்கொண்டு தினமும் குடும்பம் நடத்திய சூழ்நிலையில் நான் எனது பெற்றோரை பராமரிக்க பணம் கொடுக்க வாய்ப்பே இல்லைஎன்றாலும் அவ்வாறு கொடுக்கும்போது மனுதாரர் தடுத்தார் என்றும் ATM Card ஐ வாங்கி வைத்துக்கொண்டார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

19. 21.09.2015 ம் தேதி 21 நாட்கள் பயிற்சிக்காக நான் கன்னியாகுமரி செல்லவேண்டியிருந்ததால் நான் அரூரில் உள்ள எனது வீட்டில் மனுதாரரை இருக்க சொன்னேன் என்றாலும் அதற்கு அது ஒரு காட்டுப்பகுதி என்றும் எனது குடும்பத்தினரை இழிவாக பேசியும் அங்கு இருக்க மறுத்துவிட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் 30.09.2015 ம் தேதிதான் எனக்கு பயிற்சிக்கான உத்தரவே வந்தது என்றாலும் நான்தான் எனது சுயவிருப்பத்தின்பேரில் மனுதாரரை மேட்டுரில் உள்ள அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு பயிற்சிக்காக சென்றேன் என்றால் சரியல்ல.

**கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை**

**தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**